# 7.2 வாரித் தந்த வள்ளல்

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1. பொற்காசு – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது …
அ) பொற் + காசு
ஆ) பொல் + காசு
இ) பொன் + காசு
ஈ) பொ + காசு
Answer:
இ) பொன் + காசு

2. கொடைத்திறம் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ……………………
அ) கொடை + திறம்
ஆ) கோடை + திறம்
இ) கொட + திறம்
ஈ) கொடு + திறம்
Answer:
அ) கொடை + திறம்

3. களிறு என்பது ………………… யைக் குறிக்கும்
அ) குதிரை
ஆ) கழுதை

இ) யானை
ஈ) ஒட்டகம்
Answer:
இ) யானை

4. தரணி – இச்சொல்லின் பொருள் ……………………
அ) மலை
ஆ) உலகம்
இ) காடு
ஈ) வானம்
Answer:
ஆ) உலகம்

5. 'சோறு' இச்சொல்லுடன் பொருந்தாதது ………………
அ) உணவு
ஆ) அமுது
இ) அன்னம்
ஈ) கல்
Answer:
ஈ) கல்

ஆ. பொருத்துக

1. பேழை – வாசல்
2. மாரி – கடன்
3. வாயில் – பெட்டி
4. ஆணை – மழை

5. இரவல் – கட்டளை
Answer:
1. பேழை – பெட்டி
2. மாரி – மழை
3. வாயில் – வாசல்
4. ஆணை – கட்டளை
5. இரவல் – கடன்

இ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. பாணனின் குழந்தைகள் பசியால் வாடக் காரணம் என்ன?
Answer:
பாணனின் வீட்டில் தானியங்களும் மாவும் தீர்ந்துவிட்டதால், குழந்தைகள் பசியால் வாடின.

2. வல்வில் ஓரியின் சிறந்த பண்பு யாது?
Answer:
தன்னை நாடி வருபவர்களின் துயரைக் கண்டு வருத்தமுற்று உடனடியாக அவர்களின் துயர் துடைப்பவர்.

3. பரிசு பெற்ற பாணன், மன்னனை எவ்வாறு வாழ்த்தினான்?
Answer:
“கற்ற கல்வி அறியாமை அகற்றுதல் போல, உற்ற துயர் துடைக்கும் வள்ளலே! உங்களின் குன்றாப் புகழ் கொடைப்

பண்பு ஓங்குக! வாழ்க! வாழ்க! நீவிர் வாழ்க!” என்று பாணன் மன்னனை வாழ்த்தினான்.

4. “வாரித் தந்த வள்ளல்” – இப்படக் கதை மூலம் நீவிர் அறிந்து கொண்டதை எழுதுக.

Answer:

“வாரித் தந்த வள்ளல்’ இப்படக் கதை மூலம் சங்க கால வள்ளல்கள், தமிழுக்குப் புகழ் சேர்க்கும் விதமாக தமிழ் பாடும் புலவர்களையும் பாணர்களையும் பரிசுப் பொருள்கள் கொடுத்து அவர்கள் மகிழ்ச்சியுடன் வாழ உதவி செய்துள்ளனர் என்பதை அறிந்து கொண்டேன்.

ஈ. சிந்தனை வினா.

வல்வில் ஓரியைப் போல் ஈசைக் குணம் உனகிருந்தால் நீ யாருக்கெல்லாம் உதவி செய்வாய்?

Answer:

- வல்வில் ஓரியைப் போல் ஈகைக் குணம் எனக்கிருந்தால், ஆதரவற்ற முதியவர்கள், பெற்றோரை இழந்த சிறுவர்கள், உடல் ஊனமுற்றோர் ஆகியோருக்கெல்லாம் உதவி செய்வேன்.
- அவர்கள் சுயமாக வாழ்வதற்குத் தேவையானவற்றைச் செய்வேன்.